**செ. கு. எண்: 114** **நாள்: 10.05.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.5.2013

சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகே முத்தம்பட்டி கிராமம், தேசிய நெடுஞ்சாலையில் 9.5.2013 அன்று நள்ளிரவு சிதம்பரத்திலிருந்து சேலம் நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மீது சில விஷமிகள் கல் எறிந்து தாக்கியதில், பேருந்தில் பயணம் செய்த ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புளியம்பட்டி கிராமம், நொச்சிக்குட்டை ஊராட்சி, பொன்மேட்டைச் சேர்ந்த திரு. சோக்கான் என்பவரின் மகன் செல்வன் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இன்று (10.5.2013) அதிகாலை உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பேருந்து மீது கல் எறிந்து தாக்கியதில், உயிரிழந்த செல்வன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கொடூர தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கும்படி நான் காவல் துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த செல்வன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**